# KAYALPATTINAM MUNICIPALITY
## FORM 3
## Minutes of the Meeting held on 18.08.2017

| Date of Council meeting | Deceison Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 18.08.17 | 1421 | **<u>மன்றப்பொருள்:1</u>**<br>1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்கள் உள்ளிட்ட ஏனையை கேளிக்கைகள் மீது கேளிக்கை வரி விதித்து வசூலிக்கப்பட்டு வந்தன. இந்த சட்டம் நீக்கரவு செய்யப்பட்ட நிலையில், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 1.7.2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் திரைப்படங்கள் உள்ளிட்ட கேளிக்கைகள் மீது வரி விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, தமிழ் திரைப்பட வர்த்தக சபை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ் திரைப்பட சம்மேளனம், தென்னிந்திய திரைப்பட சபை ஆகிய சங்கங்கள் கேளிக்கைகள் வரியினை ரத்து செய்யவும், திரைப்படத்திற்கான நுழைவுச் சீட்டினுடைய விலையினை உயர்த்தவும் மற்றும் சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்து உள்ளனர். இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி, எந்த ஒரு கேளிக்கை அல்லது கேளிக்கைகளின் வகைகள் மீது விதிக்கப்படும் கேளிக்கை வரியிலிருந்து உள்ளாட்சிமன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில், அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களிக்கலாம் அல்லது கேளிக்கைகள் மீது விதிக்கப்பட்ட வரியை தள்ளுபடி (Remission) செய்யலாம். இச்சங்கங்களின் கோரிக்கைகளை அரசு பரிசீலிப்பதற்கு ஏதுவாக | 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20 / 2017) , பிரிவு 11–ன் படி, அச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரியினை செலுத்தும் கடப்பாட்டிலிருந்து, அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் வரிவிதிப்பதிலிருந்து விலக்களிப்பதற்கும் (EXEMPTION); மேலும் எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்த ஒரு நபர் அல்லது நபர்களின் வகையினர் செலுத்த வேண்டிய கேளிக்கை வரி முழுவதையுமோ அல்லது அதன் பகுதி எதனையுமோ முன்தேதியிட்டோ அல்லது பின் தேதியிட்டோ தள்ளுபடி (REMISSION) செய்வதற்கும் மன்றம் தீர்மானம் இயற்றி அரசின் பரிசீலனைக்கு அனுப்பலாம் என்ற சட்ட வகைமுறைகளின் அடிப்படையில் மேற்படி கோரிக்கைகள் குறித்து மன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டது.<br>அதன்படி, மாநகராட்சிகளின் / நகராட்சிகளின் / பேரூராட்சிகளின் நலன் கருதியும் மற்றும் அரசுக்குள்ள கடப்பாடுகளை செவ்வனே நிறைவேற்றும்பொருட்டு,-<br>**1).**அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு எந்த ஒரு கேளிக்கைக்கும் அல்லது கேளிக்கைகளின் வகைக்கும் கேளிக்கைவரி விதிப்பதிலிருந்து விலக்களிக்கவும்;<br>**2).**எந்த ஒரு கேளிக்கைகள் அல்லது கேளிக்கைகளின் வகைகள் அல்லது எந்த ஒரு உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் வகையினர் அல்லது எந்த ஒரு நபர் அல்லது நபர்களின் வகையினர் பொறுத்தும் கேளிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளாட்சி மன்றங்களின் கருத்துகளைப் பெற்று அனுப்புமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளதன் அடிப்படையில் (அரசு கடித எண்.14781 / தேர்தல் / 2017–1, நாள்: 1.8.2017) நகராட்சி நிர்வாக ஆணையர் அதனை மேலனுப்பி மன்றத்தின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் அனுப்பி வைக்குமாறு கேட்டு கொண்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. (கோப்பு எண்:184/2017/அ3) | வரி முழுவதையும் அல்லது அதன் பகுதி எதனையும் முன்தேதியிட்டோ அல்லது பின்தேதியிட்டோ அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு கேளிக்கை வரியை தள்ளுபடி செய்யவும்; மற்றும் மேலே சொல்லப்பட்ட கோரிக்கைகள் போன்று அரசு பொருத்தமெனக் கருதும் பிறவற்றின் மீது பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கவும், **அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.** |
| | 1422 | **மன்றப்பொருள்: 2**<br>காயல்பட்டணம் நகராட்சியில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.2967.00இலட்சம் மதிப்பில் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்த அரசானை பிறப்பிக்கப்பட்டு அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s ஸ்ரீராம் இ.பி.சி லிட்,சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியின்படி கோரப்பட்ட தொகை ரூ.27,84,15,000/-க்கு பணிகள் செய்ய 07.01.2013 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு திட்ட மதிப்பீட்டில் உள்ள 9 பணிகளில் வீட்டுக்குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணியினைத்தவிர மீதமுள்ள 8 பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 08.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் நகராட்சி பொதுமக்களுக்கு தற்பொழுது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.மேற்கண்ட இத்திட்டத்தின் விரிவான திட்டமதிப்பீடு 2008-09ல் தயாரிக்கப்பட்ட பொழுது வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்பு பதிவேடு 2008-09ன்படி அனுமதிக்கப்பட்ட 6863 எண்ணம் வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்புகள் மட்டும் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.ஆனால் காயல்பட்டணம் நகராட்சியில் 2016-17ம் ஆண்டு குடிநீர் குழாய் இணைப்பு பதிவேட்டின்படி சுமார் 9200 வீட்டுக்குடிநீர் இணைப்புகளும் 15 எண்ணம் வணிக பயன்பாடு குடிநீர் குழாய் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இணைப்புகளும் (மொத்தம் 9215) வழங்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது.ஆனால் திட்ட மதிப்பீட்டில் 6863 எண்ணம் இணைப்புகள் மட்டுமே வழங்குவதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளதால் அப்பணிகளை மட்டும் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.அதனால் கூடுதலாக உள்ள 2352 எண்ணம் குடிநீர் இணைப்புக் மற்றும் வேறு சில மேம்பாட்டுப்பணிகளையும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டுத்தொகையில் சேர்த்து, பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததார நிறுவனமான M/s ஸ்ரீராம் இ.பி.சி லிட்,சென்னை அவர்கள் மூலம் செய்வதற்கும் அதற்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.2967.00இலட்சத்திற்கும் (WORK SLIP) நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடத்தில் அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | 1423 | **மன்றப்பொருள்:3**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது மக்களுக்கு பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக பழுதடைந்துள்ள குடிநீர் வால்வு தொட்டிகளை சீரமைத்து மேல் மூடி அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.70இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1402 நாள்.27.06.2017 ன்படி அனுமதி பெறப்பட்டு 03.08.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) திரு.ஆர்.தலவாணிமுத்து,<br>38 பூந்தோட்டம்,<br>காயல்பட்டணம் மதிப்பீடு ரேட்டை விட 0.01% குறைவு<br>2) திரு.எஸ்.குமரேசன்,<br>12 வணிக வளாகம்,<br>திருச்செந்தூர் மதிப்பீடு ரேட்டை விட 0.03% கூடுதல்<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.தலவாணிமுத்து, காயல்பட்டணம் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட | குறைந்த ஒப்பந்தபுள்ளி அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். அதலால் குறைந்த ஒப்பந்தப்புள்ளினை அங்கிகரிக்க அனுமதிக்கு. | |
| | 1424 | **மன்றப்பொருள்:4**<br>காயல்பட்டணம் நகராட்சியில் காயல்பட்டணம் நகராட்சியில் 11வது வார்டுக்குட்பட்ட பெரிய நெசவுத்தெரு சாலையில் சேதமடைந்த பகுதிக்கு மட்டும் சிமெண்ட் கல் பதித்து சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1403 நாள்.27.06.2017 ன்படி அனுமதி பெறப்பட்டு 03.08.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) திரு.ஆர்.தலவாணிமுத்து,<br>39 பூந்தோட்டம்,<br>காயல்பட்டணம் மதிப்பீடு ரேட்டை விட 0.06% குறைவு<br>2) திரு.எஸ்.குமரேசன்,<br>12 வணிக வளாகம்,<br>திருச்செந்தூர் மதிப்பீடு ரேட்டை விட 0.10% கூடுதல்<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.தலவாணிமுத்து, காயல்பட்டணம் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். அதலால் குறைந்த ஒப்பந்தப்புள்ளினை அங்கிகரிக்க அனுமதிக்கு. | குறைந்த ஒப்பந்தபுள்ளி அங்கீகரிக்கப்பட்டது |
| | 1425 | **மன்றப்பொருள்:5**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 8வது வார்டுக்குட்பட்ட கொச்சியார் தெரு | குறைந்த ஒப்பந்தபுள்ளி அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | சாலையில் சேதமடைந்த பகுதிக்கு மட்டும் சிமெண்ட் கல் பதித்து சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1404 நாள்.27.06.2017 ன்படி அனுமதி பெறப்பட்டு 03.08.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) திரு.எஸ்.பால்ராஜ்,<br>முத்துசாமிபுரம்,<br>கீழக்கரை. மதிப்பீடு<br>ரேட்டை விட 2.20% கூடுதல்<br>2) திரு.எஸ்.குமரேசன்,<br>12 வணிக வளாகம்,<br>திருச்செந்தூர் மதிப்பீடு<br>ரேட்டை விட 0.06% குறைவு<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.குமரேசன் , திருச்செந்தூர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். அதலால் குறைந்த ஒப்பந்தப்புள்ளினை அங்கிகரிக்க அனுமதிக்கு. | |
| | 1426 | **மன்றப்பொருள்:6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 12வது வார்டுக்குட்பட்ட பூந்தோட்டம் பகுதியில் காயிதேமில்லத்நகர் பிரதான சாலையில் சிறுபாலம் கட்ட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 4.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1286 நாள்.05.07.2016 ன்படி அனுமதி பெறப்பட்டு 03.08.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு | குறைந்த ஒப்பந்தபுள்ளி அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) திரு.ஆர்.தலவாணிமுத்து,<br>40 பூந்தோட்டம்,<br>காயல்பட்டணம் மதிப்பீடு<br>ரேட்டை விட 0.13% கூடுதல்<br>2) திரு.டி.மாதவன்,<br>20ஏ ஓடக்கரை,<br>காயல்பட்டணம். மதிப்பீடு<br>ரேட்டை விட 0.13% குறைவு<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.மாதவன் , காயல்பட்டணம்.என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.13% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். அதலால் குறைந்த ஒப்பந்தப்புள்ளினை அங்கிகரிக்க அனுமதிக்கு. | |
| | 1427 | **மன்றப்பொருள்:7**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 10வது வார்டுக்குட்பட்ட கே.எம்.டி மருத்துவமனை எதிர்புறம் தெரு (திருச்செந்தூர் சாலை) சாலையில் புதிய பாலம் கட்ட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 8.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1369 நாள்.10.02.2017 ன்படி அனுமதி பெறப்பட்டு 03.08.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 1) திரு.ஆர்.தலவாணிமுத்து,<br>38 பூந்தோட்டம்,<br>காயல்பட்டணம் மதிப்பீடு ரேட்டை விட 0.02% குறைவு<br><br>2).திரு.எஸ்.குமரேசன்,<br>12 வணிக வளாகம்,<br>திருச்செந்தூர் மதிப்பீடு ரேட்டை விட 0.17% கூடுதல்<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.தலவாணிமுத்து, காயல்பட்டணம் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். அதலால் குறைந்த ஒப்பந்தப்புள்ளினை அங்கிகரிக்க அனுமதிக்கு. | |
| | 1428 | <u>**மன்றப்பொருள்:8**</u><br>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகரமாக மாற்ற மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்த நடைமுறைகள்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்ட விபரப்படி வார்டுவாரியாக திறந்தவெளி கழிப்பிடம் இல்லாததை உறுதி செய்து காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகள் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சி பகுதியாக அறிவிக்கை செய்திடவும், இது குறித்து பொதுமக்களிடம் கருத்து மற்றும் ஆட்சேபணை பெற்று இறுதி செய்யவும், நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு. | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1429 | **மன்றப்பொருள்:9**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பிளாஸ்டிக் மேலாண்மை துணைவிதிகள் 2016னை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் அதற்கான கட்டணம் ரூ.18900/– எஸ்.பி.ஐ வங்கி கணக்கு எண்:005800 என்ற கணக்கில் செலுத்தப்பட்டது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது. | அங்கீகரிக்கப்பட்டது |
| | 1430 | **மன்றப்பொருள்:10**<br>காயல்பட்டணம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்திட்ட 2016 துணை விதிகள் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்த வகைக்கு அதற்கான செலவினத்தொகை ரூ.67200/– எஸ்.பி.ஐ.வங்கி குறியீட்டு எண்:005800–ல் செலுத்தியது மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1431 | **மன்றப்பொருள்11**<br>இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு 21.11.2016 முதல் 31.07.2017 வரை S.R.S.Computer Xerox கடையிலிருந்து ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட வகைக்கு வரப்பெற்ற பில்பட்டியல் தொகை ரூ.4662/– மட்டும் மேற்படி கடை உரிமையாளருக்கு வழங்கவும், அதற்கான செலவு தொகையினை பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1432 | **மன்றப்பொருள்:12**<br>இந்நகராட்சியில் 04.08.2017 அன்று நடைபெற்ற பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு ஏலம் கோரப்பட்டது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | குத்தகையினங்கள் | ஏலம் கோரியவர் பெயர் | ஏலக்கேள்வி தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1. | ஆடு,மாடு அறுவைக் கட்டணம் வசூல் உரிமம் | 1)திரு.எ.ஹனிபா, காயல்பட்டணம் | 190100/– |
| 2. | கடற்கரை பூங்கா வாகன நிறுத்தக்கட்டண உரிமம் | 1).திரு.ஆர்.எஸ்.கோபால், காயல்பட்டணம் | 23500/– |
| | | 2).திரு.எம்.இ.அப்துல்காதர்,காயல்பட்டணம் | – |
| | | 3).திரு.எம்.முஹம்மது இஸ்மாயில் புஹாரி,காயல்பட்டணம் | 23600/– |
| 3. | கடற்கரை சிறுவியாபாரிகள் கட்டணம் வசூல் உரிமம் | 1).திரு.எம்.முஹம்மது இஸ்மாயில் புஹாரி,காயல்பட்டணம் | 16600/– |
| | | 2).திரு.எம்.முஹம்மது இஸ்மாயில் புஹாரி,காயல்பட்டணம் | 16650/– |
| | | 3).திரு.ஆர்.எஸ்.கோபால், காயல்பட்டணம் | 16800/– |
| 4. | நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பழைய பொருட்கள் | 1).திரு.ஆர்.எஸ்.கோபால், காயல்பட்டணம் | 7500/– |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5. | குடிநீர் திட்ட உபயோகத்திற்கு லாயக்கற்ற பழைய பொருட்கள் | 1).திரு.மாதவன்,காயல்பட்டணம் | 17500/– | | 1).திரு.மாதவன்,காயல்பட்டணம் | |
| | | | | 2).திரு.ஆர்.எஸ்.கோபால், காயல்பட்டணம் | 17100/– | | | |
| | | 6. | நகராட்சியில் உள்ள பழைய மரசாமான்கள் | 1).திரு.கெ.ஆனந்த்,காயல் பட்டணம் | 10200/– | | 1).திரு.கெ.ஆனந்த்,காயல்பட்டணம் | |
| | | 7. | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேருந்துநிலைய பேருந்து நுழைவுகட்டணம் வசூல் உரிமம் | | | | ஏலக்கேள்வி இல்லை | |
| | | 8. | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட மரங்களின் மேலாதாயம் | | | | ஏலக்கேள்வி இல்லை | |
| | | 9. | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேருந்து நிலைய உள் கடை எண்:5 | | | | ஏலக்கேள்வி இல்லை | |
| | | 10. | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேருந்து நிலைய உள் கடை எண்:6 | | | | ஏலக்கேள்வி இல்லை | |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்படி வரிசை எண்:1 முதல் 6 வரை குறிப்பிடப்பட்டுள்ள குத்தகையினங்களில் கூடுதல் ஏலக்கேள்வி கோரியுள்ள ஏலதாரருக்கு அவசர அவசியம் கருதி குத்தகை உரிமத்தினை அங்கீகரிக்கவும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்ததற்கும், ஏலக்கேள்வி இல்லாத குத்தகையினங்களை மறு ஏலம் விடவும் மன்ற அனுமதிக்கு. | |
| | 1433 | **<u>மன்றப்பொருள்:13</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்:TN92A6369-ல் ·AC பொருத்துவதற்கு கொடைகார்ஸ், திருநெல்வேலி நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளியில் மேற்படி பணிக்கான செலவு தொகை ரூ.68436/— மட்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை கொடைகார்ஸ் நிறுவனத்தில் மேற்கொள்ளவும், அதற்கான செலவு தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1434 | **<u>மன்றப்பொருள்:14</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்:TN92A6369-க்கு கொடைகார்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தில் இலவச வாகன பராமரிப்பு (ம) ஆயில் மாற்றிய வகைக்கு வரப்பெற்ற பில்பட்டியல் தொகை ரூ.5949/—னை அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு தனி அலுவலர் முன்அனுமதி பெற்று வழங்கியதையும், அதற்கான செலவு தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1435 | **<u>மன்றப்பொருள்:15</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியிலிருந்து மின்வாரியத்திற்கு ஏப்ரல் 2016–ல் செலுத்த வேண்டிய மின் கட்டணத் தொகையில் மின் இணைப்பு எண்:364–002–995–ற்கு உரிய கேட்பு தொகை ரூ.4309/– மட்டும் தவறுதலாக திருமதி.ரஹ்மத் நிஷா என்பவர் செலுத்திவிட்டார். அதற்காக காயல்பட்டணம் மின்வாரிய அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் எண்:உ.பொ/வி/காயல்/கோ.பஞ்/அ.எ.31/2017, நாள்:23.02.2017–ன்படி மேற்படி தொகையினை திருமதி.ரஹ்மத் நிஷா என்பவருக்கு திரும்ப வழங்க அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1436 | **<u>மன்றப்பொருள்:16</u>**<br>நிதி ஆலோசகர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:16140/2017/எல்ஏ2, நாள்:06.07.2017–ல் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு நகராட்சி நிதியின் கீழ் சிறப்பு ஆயுள் காப்பீட்டுத்திட்டம் நகராட்சி பங்களிப்புடன் செயல்படுத்துவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி சிறப்பு ஆயுள் காப்பீட்டு திட்டம் இந்நகராட்சி பங்களிப்புடன் துப்புரவு பணியாளர்களுக்கு செயல்படுத்திட அனுமதி கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1437 | **<u>மன்றப்பொருள்:17</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதியில் வார்டு 1 முதல் 18 வரை வீடுகள் தோறும் குப்பை எடுக்கும் பணியான முதல் நிலை சேகரிப்பு மற்றும் தெருக்கள் தோறும் சுத்தம் செய்யும் திடக்கழிவு மேலாண்மை பணியினை பணியாளர்கள் அமர்த்தி | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>குப்பைகள் சேகரிக்கும் மையத்தில் சேர்த்தல் பணிக்காக 18.08.2017 அன்று நடைபெற உள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பில்பட்டியல் தொகை ரூ.60556/–மட்டும் GOLDEN ADVERTISING & PUBLICITY,Chennai நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு.</td><td></td></tr>
<tr><td></td><td>1438</td><td><u>மன்றப்பொருள்:18</u><br>காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள கீழ்க்கண்ட வழக்குகளுக்கு உரிய வழக்கறிஞர் கட்டணம் கீழ்க்கண்டவாறு வழங்குவதற்கு அனுமதிக்கு.<br><table><tr><th>வ.எண்</th><th>வழக்கு எண்</th><th>வழக்கு விபரம்</th><th>வழக்கறிஞர் பெயர்</th></tr><tr><td>1</td><td>WP NO:14946/2013</td><td>நகர்மன்றத்தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவதற்கு உரிய கூட்டத்தினை ரத்து செய்யக்கோரி திரு.ரெங்கநாதன், காயல்பட்டணம் என்பவரால் தொடரப்பட்டது நீதிமன்ற தீர்ப்புரை வரப்பெற்றதற்கான</td><td>திரு.எம்.ராஜராஜன், அரசு வழக்கறிஞர்</td></tr></table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வழக்கறிஞர் கட்டணம் | | | |
| 2 | WP NO:3412/2013 | நகர்மன்றத் தலைவருக்கு தனி அதிகாரம் வழங்கக் கோரி திருமதி.ஆபிதா, நகர்மன்றத்தலைவரால் தொடரப்பட்ட வழக்கு நீதிமன்ற தீர்ப்புரை வரப்பெற்றதற்கான கட்டணம் | திரு.எம்.ராஜராஜன், அரசு வழக்கறிஞர் | | ரூ.3500/– |
| 3 | W.P.NO.21046/2017 | திரு.எம்.எஸ்.முஹம்மது சாலிஹ் என்பவரால் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் செயலாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மீதும் தொடரப்பட்ட வழக்குக்கு அபிடவிட் தாக்கல் செய்ய வழக்கறிஞர் கட்டணம் | திரு.எஸ்.திவாகர்,அரசு வழக்கறிஞர் | | ரூ.5000/– |

| | | | |
|---|---|---|---|
| | 1439 | **<u>மன்றப்பொருள்:19</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் TEXCO நிறுவனத்திலிருந்து பணிபுரியும் ஒப்பந்த பணியாளர்களுக்கு கூலி உயர்வு குறித்த அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், அதன்படி உரிய ஊதியம் வழங்க அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1440 | **மன்றப்பொருள்:20**<br>காயல்பட்டணம் நகராட்சியில் வறட்சியின் காரணமாகவும் தாமிரபரணி ஆற்றில் நீர் இருப்பு குறைவாக இருப்பதால் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாகவும் தமிழநாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் காயல்பட்டணம் நகராட்சிக்கு செய்யப்பட்டு வந்த குடிநீர் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டு 10தினங்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.இதனால் பெரும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்க நகராட்சியின் மூலம் போர்க்கால அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களால் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின்படி குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்க 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய நகராட்சியில் உள்ள 18 வார்டுகளை 4 மண்டலங்களாக பிரித்து கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கபட்டது.<br>மண்டலம் 1 ரூ. 5.00இலட்சம் (வார்டு எண்.1 முதல் 4)<br>மண்டலம் 2 ரூ. 5.00 இலட்சம் (வார்டு எண்.5 முதல் 8)<br>மண்டலம் 3 ரூ. 7.00 இலட்சம் (வார்டு எண். 9 முதல் 13)<br>மண்டலம் 4 ரூ.7.00 இலட்சம் (வார்டு எண்.14 முதல் 18)<br>மேற்கண்டவாறு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வேலை உத்திரவு | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டது. இப்பணியில் 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் வாகனம் மூலம் நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் பகுதி மற்றும் குடிநீர் விநியோகம் சீராக இல்லாத பகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டு மக்களுக்கு தேவையான அளவில் குடிநீர் வழங்கப்பட்டது. மேலும் காயல்பட்டணம் நகராட்சிக்கான புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் முடிவடைந்து 08.03.2017அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தில் பம்பிங் செய்யப்படும் குடிநீரினை நகராட்சிப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் சேமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி முதல் கட்டமாக நகராட்சிப்பகுதிகளில் உள்ள 2,3,4இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளை புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் பம்பிங் குழாயில் இணைக்கப்பட்டு அப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. மற்ற பகுதிகளில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் இத்திட்டத்தின் பம்பிங் பிரதான குழாயில் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்பணி முடிவடையும் வரை பொதுமக்களின் நலன் கருதி வறட்சியினை முன்னிட்டு வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணி 1மாத காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டது.இதன்படி மேற்கண்டவாறு உள்ள நான்காவது மண்டலத்தின் பகுதிகளில் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்த ஒப்பந்ததாரர் M/s கே.ஆர்.கன்ஸ்டரக்ஷன்ஸ் என்ற நிறுவனம் மூலம் அனைத்து மண்டலங்களிலும் கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மதிப்பீட்டுத்தொகை ரூ.7.00இலட்சத்தினை விட கூடுதலாக ரூ.96500/- மதிப்பில் பணி மேற்கொள்ளப்பட்டது.இதனால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட குடிநீர் விநியோகப்பணியில் ஏற்பட்ட கூடுதல் செலவினத்தொகையினை ஒப்பந்ததாரர்க்கு வழங்கவும் அதற்கு தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.7.97இலட்சத்திற்கும் மன்ற அனுமதி | |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது. | |
| | 1441 | **மன்றப்பொருள்:21**<br>காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறைகளுக்கு தேவையான மேஜை, நாற்காலி புதிதாக வாங்கிடவும் அதற்கு ஆகும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது.அரசு நிறுவனமான காதிகிராப்ட் அல்லது டேன்சி நிறுவனத்தில் வாங்கிட அனுமதிக்கப்பட்டது |
| | 1442 | **மன்றப்பொருள்:22**<br>காயல்பட்டணம் நகராட்சி எல்கைப்பகுதியில் வரவேற்பு பலகைகள் புதிதாக நிறுவிடவும், தெருக்களில் பெயர்பலகை புதிதாக நிறுவிடவும் தேவையான மதிப்பீடு தயார் செய்து பணியினை மேற்கொள்ளவும், அதற்குண்டான செலவினத்தை வருவாய் மற்றம் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1443 | **மன்றப்பொருள்:23**<br>காயல்பட்டணம் நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் அலுவலக வளாகத்தில் CCTV கேமரா பொருத்திடவும் அதற்கான செலவினத்தை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1444 | **மன்றப்பொருள்:24**<br>காயல்பட்டணம் நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் இருசக்கரவாகன காப்பகம் அமைத்திட மதிப்பீடு தயார் செய்து வேலை செய்யவும், அதற்குண்டான செலவினத்தை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1445 | **மன்றப்பொருள்:25**<br>காயல்பட்டணம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மைக்ரோ கம்போஸ்ட் செட் சிவன்கோவில் தெரு வடபுறம் அமைந்துள்ள மயானம் அருகில் சர்வே எண்: தற்காலிகமாக அமைத்திட பணியினை மேற்கொள்ளவும், அதற்குண்டான செலவுத்தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1446 | **மன்றப்பொருள்:26**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் விரிவாக்கப்பகுதி மற்றும் தெருவிளக்கு இல்லாத பகுதிகளில் நடைமுறை விதிகளின்படி பொதுமக்கள் கோரிக்கையின் பேரில் தேவையின் அடிப்படையில் 30 மீட்டருக்கு (100 அடி) ஒரு தெருவிளக்கு வீதம் புதிதாக LED விளக்குகள் அமைத்திடவும் , அதற்கான செலவினத்தை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1447 | **மன்றப்பொருள்:27**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உட்பகுதியில் அமைந்துள்ள வணிக கட்டிடத்தின் கடைகளுக்கு முன்பாக பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அறை கழிப்பறையாக இருந்தது பின்னர் பழைய சாமான்கள் வைத்திருக்க பயன்படுத்தப்பட்டு வரப்பட்ட அறை பூட்டப்பட்ட நிலையில் உள்ளதை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டும் அதற்கு தற்போது சாகுபுரம் கிளை சிட்டி யூனியன் வங்கி மேலாளர் ATM மையம் நிறுவுவதற்கு ஒதுக்கீடு செய்து தர கோரி கடிதம் வரப்பெற்றதை பரிசீலித்து தற்போது அறை பயன்பாடற்று உள்ளதால் மேற்படி அறையினை சிட்டி னயன் வங்கிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | நியமிக்கப்பட்ட குழுவில் பரிந்துரைக்கப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகைக்கு மாத வாடகைக்கு வழங்கிட மன்ற அனுமதிக்கு. | |
| | 1448 | **மன்றப்பொருள்:28**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:7, தீவுத்தெருவில் உள்ள பழைய வேப்பமரம் ஒன்று சாய்வாக விழும் நிலையில் உள்ளதால் பொதுமக்களிடமிருந்து மரத்தினை அகற்றக்கோரி புகார் மனு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி பொதுமக்களுக்கு பாதிப்பாக உள்ள வேப்பமரத்தினை அகற்ற மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | | | |
| | | | |